**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8093633

1. District / மாவட்டம் : விழுப்புரம் | PS / காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு | Year / ஆண்டு : 2019 | FIR No. / மு.த.அ. எண் : 16/2019 | Date / நாள் : 04.10.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: As Amended by The Prevention of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Criminal Procedure Code — Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் 03.10.2019 | Date to : நாள் வரை
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.10.2019 | Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 90 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.அமுதா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர், விழுப்புரம் | (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், விழுப்புரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**திரு.வீ.வீராங்கன், வயது 52/2019, த/பெ. வீராசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர், (கிராம ஊராட்சி), சின்னசேலம், விழுப்புரம் மாவட்டம்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant.
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**தகவல் கொடுப்பவரால் தாமதம்**

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

தொகை ரூபாய் 1,44,150/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ 1,44,150/-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 04.10.2019 ந்தேதி மாலை 15.00 மணிக்கு விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது திரு.அ.அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ் கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், அ.அமுதா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ந.க.எண்:அ/444/2019, நாள்:04.10.2019 அய்யா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் - 03.10.2019 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை : திடீர் ஆய்வு மகஜர் நாள்:03.10.2019.இன்று 03.10.2019ஆம் தேதி மதியம் 14.00 மணிக்கு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய எனக்கு சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் திரு.வீ.வீராங்கன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) என்பவர் அவரது நிர்வாகத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளின் செயலாளர்களிடம் இருந்து ஊராட்சியில் நடைபெற்ற திட்ட வேலைகளுக்கு வழங்கும் மற்றும் ஊராட்சி செயலாளர்கள் நிலுவை ஊதியம் சம்மந்தமான காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் 10 சதவீதம் லஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின்படி மேற்படி அலுவலகத்தை திடீராய்வு செய்வது சம்மந்தமாக விழுப்புரம் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அங்கிருந்த காவல் துணை கண்காணிப்பாளர் திரு.E.S.J.மெல்வின் ராஜா சிங் அவர்களிடம் கலந்தாலோசித்து, நான் காவல் துணை

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
4/10/19
E.S.J. மெல்வின் ராஜசிங்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ............................
Rank: நிலை ....................No. எண் .........

கண்காணிப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து சுமார் 15.00 மணிக்கு புறப்பட்டு 17.00 மணிக்கு சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வந்தடைந்தோம். மேற்படி அலுவலகமானது சின்னசேலம் to சேலம் ரோட்டில் தெற்கு பார்த்து அமைந்துள்ளது. திரு.வீ.வீராங்கன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அறையானது மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்தில் வலது முன்புறத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி அறையினுள் செல்ல முற்பட்டபோது அறையின் வெளியில் உள்ள வராண்டாவில் பின்னர் விசாரணையில் பெயர் விலாசம் தெரிந்த 1) S.செந்தில், ஊராட்சி செயலர், அனுமனந்தல் 2). K.சாமிவேல், ஊராட்சி செயலர், நல்லாத்தூர் 3). K.ஏழுமலை, ஊராட்சி செயலர், காரனூர் 4) குருசாமி, ஊராட்சி செயலர், நாககுப்பம் 5) ம.கிருஷ்ணமூர்த்தி, ஊராட்சி செயலர், ராயர்பாளையம் 6) N. சீனிவாசன், ஊராட்சி செயலர், தெங்கியாநத்தம் 7) P.பாலகிருஷ்ணன், ஊராட்சி செயலர், V.P. அகரம் 8) J.செல்வம், ஊராட்சி செயலர், சடையம்பட்டு, 9) A.சக்திவேல், ஊராட்சி செயலர், ஏர்வாய்பட்டினம் 10) D.சந்திரசேகரன், ஊராட்சி செயலர், மேல்நாரியப்பனூர் 11) A.துரை, ஊராட்சி செயலர், தொட்டியம், 12) R.முத்தமிழ்செல்வம், ஊராட்சி செயலர், உலகியநல்லூர் ஆகியோர் இருந்தனர் அவர்களை அப்படியே வராண்டாவில் அமரச்செய்து அவர்களை கண்காணிக்க ஒரு காவல் அலுவலரை நியமித்துவிட்டு, பிறகு நான் ஆய்வுக்குழுவிருடன் வட்டார வளர்ச்சி அலுவலரின் அறையின் உள்ளே சென்றபோது கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் திரு.வீ.வீராங்கன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்கள் அமர்ந்திருந்தார். அந்த அறையில் 1) T.முத்துசாமி, ஊராட்சி செயலர், பைத்தந்துறை, 2) R.ராமச்சந்திரன், ஊராட்சி செயலர், பாண்டியன்குப்பம், 3). C.சக்திவேல், ஊராட்சி செயலர், எலியாத்தூர், 4) N.சேகர், ஊராட்சி செயலர், V.மாமண்டூர், 5) T.லச்சாதிபதி, ஊராட்சி செயலர், கனியாமூர், 6) C.துரைபாண்டியன், ஊராட்சி செயலர், கடத்தூர், 7) N.சங்கர், ஊராட்சி செயலர், கல்நைத்தம், 8) K.கோவிந்தன், ஊராட்சி செயலர், நமச்சிவாயபுரம், 9) S.கருப்பையா, ஊராட்சி செயலர், வாசுதேவனூர், 10) R.பழனியம்மாள், ஊராட்சி செயலர், ராயப்பனூர், 11) K.மேனகா, ஊராட்சி செயலர், தொட்டப்பாடி, 12) G.கல்ராஜ், ஊராட்சி செயலர், கருங்குழி, ஆகிய 12 ஊராட்சி செயலர்கள் இருந்தனர். அவர்களை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் அமரச்செய்து பின்பு அங்கிருந்தவர்களிடம் மேற்படி அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக நாங்கள் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டபோது வட்டார வளர்ச்சி அலுவலர் பதற்றமடைந்தார் அவரை நானும் காவல் துணை கண்காணிப்பாளரும் ஆசுவாசப்படுத்தி அவரது இருக்கையில் அமரச்செய்தோம். நானும் உடன் வந்த காவல் குழுவினர்கள் அனைவரும் தங்களது அடையாள அட்டையை காண்பித்து

அறிமுகப்படுத்திக்கொண்டு எங்களை வட்டார வளர்ச்சி அலுவலர் வீ.வீராங்கன் முன்னிலையில் சுயபரிசோதனை செய்து காண்பித்து எங்களிடம் பணமோ, பொருளோ இல்லை என்பதை உறுதிசெய்து காண்பித்தோம். பின்பு அவரிடம் உங்கள் அலுவலகத்தை சோதனை செய்ய வந்திருப்பதாக கூறி அவரை உடனிருக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதற்கு அவரும் சம்மதித்து உடனிருந்தார். பின்பு மேற்படி அலுவலகத்தை சோதனை செய்ய மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலரின் மேசையின் மீது ஒரு கவரில் 45,000/- தொகை இருந்தது அதுபற்றி திரு.வீ.வீராங்கன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களிடம் கேட்க அவர் இந்த தொகை எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது என்று கூறியதால் மேற்படி தொகை திட்டப்பணிகள் சம்மந்தமான காசோலையில் கையொப்பமிட லஞ்சமாக கொடுக்கப்பட்டிருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.வீ.வீராங்கன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் மேசைமீது வைக்கப்பட்டிருந்து கோப்புகளுக்கு இடையில் இருந்து ரூபாய் 28,000/- கண்டெடுக்கப்பட்டது மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் இந்த தொகை எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது என்று கூறியதால் மேற்படி தொகை ரூபாய் 28,000/- லஞ்சமாக பெற்ற தொகையாக இருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.வீ.வீராங்கன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் அலுவலகத்தின் முன்புற வராண்டாவில் இடது புறத்தில் இருந்த ரேக்கில் இருந்து ரூபாய் 34,650/- கண்டெடுக்கப்பட்டது மேற்படி தொகை குறித்து வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கேட்க அவர் அங்கு பணம் எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது என்று கூறியதால் மேற்படி தொகை ரூபாய் 34,650/- லஞ்சமாக பெறப்பட்டு இருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.வீ.வீராங்கன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் அலுவலகத்தின் வராண்டாவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பழைய ஆவணங்களுக்கு இடையில் ரூபாய் 36,500/- கண்டெடுக்கப்பட்டது. மேற்படி தொகை குறித்து வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கேட்க அவர் பணம் எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது என்று கூறியதால் மேற்படி தொகை ரூபாய் 36,500/- லஞ்சமாக பெறப்பட்டு இருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சின்னசேலம் ஊராட்சி ஒன்றிய அலுவலத்தில் உள்ள திரு.வீ.வீராங்கன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் அலுவலகத்தினை சோதனை செய்ததில் மேற்கண்ட விவரப்படி கண்டெடுக்கப்பட்ட மொத்த தொகை ரூ.1,44,150/- மேற்சொன்னவாறு ஊராட்சி செயலாளர்கள் திட்ட பணிகளுக்கு, ஊராட்சியில் செலவு மேற்கொள்ளப்பட்ட செலவு ரசீதுகளுக்கும் மற்றும் ஊராட்சி செயலர் மற்றும் பணியாளர்களுக்கு மாதாந்திர நிலுவை ஊதியம் சம்மந்தமான காசோலைகளில் கையொப்பமிட்ட / கையொப்பம் இடவேண்டியது

சம்மந்தமாக லஞ்சப்பணம் பெறப்பட்டிருக்கலாம் என கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், வட்டார வளர்ச்சி அலுவலக வருகைப்பதிவேடு பற்றி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.வீ.வீராங்கன் அவர்களிடம் கேட்க அதை அவர் எடுத்து ஆஜர்படுத்தினார். மேற்படி வருகைப்பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி சம்பவம் தொடர்பாக திரு.வீ.வீராங்கன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 03.10.2018 இரவு 17.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீராய்வு மகசரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், இணைப்பு 1.ரொக்கம் ரூ.1,44,150/- (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து நூற்று ஐம்பது) 2.வளர்ச்சி அலுவலக வருகைப்பதிவேடு. 3.திரு.வீ.வீராங்கன் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் வாக்குமூலம்.

Sir Received the complainant and registered the same in Viluppuram V&AC, Cr.No.16/2019 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the P.C (Amendment) Act and 102 Cr.P.C., on 04.10.2019 at 15.00hrs (sd) E.S.J.Melwyn Raja sing, 04.10.2019, V&AC, Viluppuram.

இதன் அசல் நகலையும் வாதியின் புகார் மனுவையும், வழக்கின் சொத்தையும் இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

4/1-/19

(திரு.E.S.J.மெல்வின் ராஜசிங்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கடலூர்,விழுப்புரம்(கூடுதல் பொறுப்பு).